# போட் டெயில்:
# அடுத்த அத்தியாயம்

20 மே 2022

- கலைநயமிக்க வடிவமைப்பைக் கொண்ட போட் டெயில் காரை வழங்கும் ரோல்ஸ்-ராய்ஸ்
- இத்தாலியில் உள்ள கான்கோர்சோ டி'எலிகன்ஸே, வில்லா டி'எஸ்டேயில் நாளை (மே 21) புதிய கார் அறிமுகம்
- போட் டெயில் கார் ரோல்ஸ்-ராய்ஸ் நிறுவனத்தின் பிரத்யேக நிபுணர்களின் திறமையை வெளிப்படுத்துகிறது
- ஒரு வாடிக்கையாளரால் அவரது தந்தை மற்றும் குடும்ப பாரம்பரியத்திற்கு மரியாதை செலுத்தும் வகையில் இது உருவாக்கப்பட்டது
- கண்கவர் வெளிப்புற வண்ணத்துடன் அழகான உட்புற வடிவமைப்பைக் கொண்டுள்ளது

ரோல்ஸ்-ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி டார்ஸ்டன் முல்லர்-ஓட்வோஸ் போட் டெயில் கார் பற்றி கூறுகையில், எங்கள் நிறுவனத்தின் தனித்துவமிக்க கோச்பில்ட் பிரிவானது ஆடம்பர மாளிகையாக எங்கள் பணியை ஒரு உச்ச நிலைக்கு உயர்த்துகிறது; இது எங்கள் தொழில்துறையின் சிறந்த பாணியாகும். பிரத்யேக வடிவமைப்பை விரும்பும் எங்கள் வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக இந்த பிரிவு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஒரு அழகான மோட்டார் காரைக் காட்டிலும், சிறந்த நிபுணத்துவமிக்க பணியாளர்களால் உருவாக்கப்படும் கலைநயமிக்க வடிவமைப்பானது ஒவ்வொரு



The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com
Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட உணர்வுகளை பிரதிபலிப்பதோடு அது அவர்களின் பாரம்பரியம் சார்ந்த ஒன்றாக மாறும். எங்களின் கோச்பில்ட் பிரிவானது வடிவமைப்பு, அதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் கைவினைத்திறனை மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் வாய்ப்புகள் உள்ளிட்டவற்றை எங்கள் வடிவமைப்பாளர்களுக்கு வழங்குவதோடு அவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான அற்புதமான வாய்ப்புகளையும் வழங்குகிறது. எங்கள் நிறுவனத்தை பொறுத்தவரை தற்போதைய காலத்திற்கு ஏற்ற கார்களை வழங்குவதோடு, வழக்கமான வாகன உற்பத்தி துறையில் சாத்தியமில்லாத ஒன்றை வடிவமைத்து அதை யதார்த்தமாக வழங்குவதே எங்களின் தனிப்பட்ட சிறப்பாகும் என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,
ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் ஒவ்வொரு கோச்பில்ட் பிரிவும் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். ஆனால் தற்போதைய இந்த போட் டெயில் கார் விஷயத்தில், ஆழமான ஒரு உணர்வு இருந்தது. அதாவது எங்கள் வாடிக்கையாளரின் தந்தை மற்றும் அவரது முத்து தொழில் சார்ந்த குடும்ப வரலாற்றின் நினைவாக ஒரு காரை உருவாக்குவது எங்களுக்கு கிடைத்த பாக்கியம் ஆகும்; இது நாங்கள் இதயப்பூர்வமாக எடுத்துக் கொண்ட மிகச் சிறப்பான பொறுப்பாகும். இந்த காரின் வடிவமைப்பானது ஒரு நகரும் கலைப் படைப்பாக மாறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து ரோல்ஸ்-ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனத்தின் கோச்பில்ட் வடிவமைப்பு பிரிவு தலைவர் அலெக்ஸ் இன்னஸ் கூறுகையில், கோச்பில்ட் பிரிவின் வடிவமைப்பில் வெளிவரும் போட் டெயில் காரின் மூலம் அடுத்த அத்தியாயத்தை வழங்குவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். எப்போதாவது உருவாக்கப்படும் இதுபோன்ற கார்களில் மூன்றில் ஒன்றாக இது உள்ளது. கோச்பில்ட் பிரிவின் சிறப்பு அம்சம் என்னவென்றால், ஒவ்வொரு வடிவமைப்பும் அதன் உரிமையாளருக்கு முற்றிலும் தனித்துவமான மற்றும் தனிப்பட்ட கதையைச் சொல்கிறது, இது அவர்களின் சொந்த வரலாறு, விருப்பம் மற்றும் உணர்வுகளை பிரதிபலிக்கிறது. இதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள போட் டெயில் கார், வடக்கு இத்தாலியில் உள்ள கோமோ ஏரியின் கரையில் உள்ள கான்கோர்சோ டி'எலிகன்ஸே, வில்லா டி'எஸ்டே-ல் நாளை (மே 21) அறிமுகம் செய்யப்படுகிறது. இந்த கார் நவீன தொழில்நுட்பம், நேர்த்தி மற்றும் ஒரு அழகான வடிவமைப்பிற்கான ஒரு தலைசிறந்த படைப்பாகும். 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பந்தய படகுகளால் ஈர்க்கப்பட்டு தனித்துவமான வெளிப்புறத்தை உருவாக்கும் விதமாக, அலுமினியத் தகடுகளால் போட் டெயில் முற்றிலும் கையால் தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு வகையிலும் பார்க்கும்போது, இந்த கார் முற்றிலும் தனித்துவமானது.

இந்த கார் ஒரு வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. அவரின் தந்தையால் துவக்கப்பட்ட குடும்ப வணிகமான முத்து தொழிலின் பாரம்பரியத்தை இது பிரதிபலிக்கிறது. இந்த வாடிக்கையாளர் ஏராளமான


The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com
Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

வெளிநாட்டு பயணம், சர்வதேச கல்வி மற்றும் சிறந்த ரசனை ஆகியவற்றுடன் செல்வாக்குமிக்க காஸ்மோபாலிட்டன் உறுப்பினராகவும் உள்ளார். மேலும் அவரிடம் ஏராளமான கிளாசிக் மற்றும் நவீன ரக கார்களும் உள்ளன. அவற்றை அவர் பிரத்யேக அருங்காட்சியகமாகவும் வைத்துள்ளார். இந்த காரில் அவரின் ஆடம்பரம் குறித்த தொழில்நுட்ப அறிவு மிகவும் அழகாக பிரதிபலிக்கிறது. இந்த கார் ஒட்டுமொத்தமாக மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து பொருட்களும் மிக கவனமுடன் கையாளப்பட்டுள்ளன. இந்த கார் அந்த வாடிக்கையாளரின் தந்தைக்கு மிகவும் தனிப்பட்ட மற்றும் உணர்ச்சிபூர்வமான மரியாதையை செலுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கார் வடிவமைப்பின் துவக்கத்தில் ரோல்ஸ் ராய்ஸ் கோச்பில்ட் வடிவமைப்பாளர்களுக்கு வாடிக்கையாளர் நான்கு முத்துகளைத் தேர்ந்தெடுத்து வழங்கினார். அதன் தனித்துவமான நிறம் மற்றும் சிறந்த தன்மைக்காக தனிப்பட்ட முறையில் அவரது பிரத்யேக சேகரிப்பிலிருந்து அவை வழங்கப்பட்டது. இந்த முத்துக்கள் அந்த காரின் வெளிப்புற நிறத்திற்கான உத்வேகத்தை வழங்கின. முத்துக்கள் மற்றும் மென்மையான ரோஜாவின் மினுமினுப்பான கலவையுடன் இதன் வெளிப்புற நிறம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள வெள்ளை மற்றும் வெண்கல மைக்கா துகள்கள் சூரிய ஒளியின் தன்மைக்கு ஏற்ப வெவ்வேறு நிறங்களை பிரதிபலிக்கின்றன. இந்த காருக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட மாறுபட்ட காக்னாக் நிற பானட், சிறந்த வெண்கலம் மற்றும்



The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

தங்க நிற அலுமினிய மைக்கா துகள்களைக் கொண்டுள்ளது, இதன் மேற்புறம் உள்ள கிறிஸ்டல் மற்றும் ஐஸ் மேட் வடிவமைப்பு இந்த காருக்கு சிறப்பானதொரு தோற்றத்தை தருகிறது.

தனித்துவமான 'பட்டர்பிளை டிசைன்' ஹோஸ்டிங் சூட்டைக் கொண்டிருக்கும் இந்த காரின் பின்புற டெக்கில், ராயல் வால்நட் வெனீர், ரோஜா தங்க முலாம் பூசப்பட்ட கோடுகள் மற்றும் ஒளிக்கீற்றுகள் போன்ற பூச்சுகளுடன் அதிநவீன தோற்றத்தை அளிக்கிறது.

இதன் முன்புறத்தில், தரமான ஒரே அலுமினியத்தில் தயாரிக்கப்பட்ட பாந்தியன் கிரில், ரோஜா தங்க நிறத்தில் வடிவமைக்கப்பட்ட ‘ஸ்பிரிட் ஆப் எக்ஸ்டசி’ சின்னம் ஆகியவை இந்த காருக்கு மேலும் அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

இதன் உட்புறம் முழுக்க முழுக்க ரோஜா தங்க நிறம் மற்றும் முத்து போன்ற நிறத்திலான தோல்கள் மற்றும் ராயல் வால்நட் வெனீர் ஆகியவற்றால் அழகாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள தோல்கள், முத்து பூச்சுடன், உட்புற வடிவமைப்பின் மேற்பரப்புகள் மற்றும் வடிவங்களை அழகாக பிரதிபலிக்கின்றன.

டாஷ்போர்டின் மையப்பகுதியில் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட கடிகாரம் ஒன்று உள்ளது. இந்த முத்துக்கள் வாடிக்கையாளர் சேகரிப்பில் இருந்து

பிரத்யேகமாக வழங்கப்பட்டவை ஆகும். அதே முத்துக்கள், கட்டுப்பாட்டு சுவிட்ச்கள் மற்றும் பிற உட்புறங்களையும் அலங்கரிக்கின்றன. இந்த கார், உரிமையாளர் மற்றும் அவரது குடும்ப பாரம்பரியத்திற்கு இடையே ஒரு வலுவான உறவை உருவாக்கி உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மேலும் இது குறித்து அலெக்ஸ் இன்னஸ் கூறுகையில், போட் டெயில் என்பது புத்தி கூர்மை மற்றும் படைப்பாற்றல் சுதந்திரத்தின் அடுத்த நிலையாகும். கையால் ஒரு காரை உருவாக்குவது என்பது சிறந்த ஒரு அனுபவத்தை வழங்குகிறது. சாதாரண தொழில்மயமாக்கப்பட்ட முறைகள் தடைசெய்யும் விஷயங்களைச் கைகளால் சாதிக்கலாம் என்பதோடு அந்த சவால்களுக்கும் தீர்வு காணலாம். இந்த கார் இரண்டு உலகங்களின் கதையாகும். சமகாலத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நவீன மோட்டார் கார், வரலாற்று நுட்பங்கள் மற்றும் காலத்தால் மதிக்கப்படும் கைவினைகளால் சாத்தியமாக்கப்பட்டுள்ளது. இது உண்மையிலேயே சிறந்த ஒன்றுதான் என்றும் அவர் தெரிவித்தார்.



The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

CONTACTS | regional

| | | |
|---|---|---|
| Nurul Azimah | +65 8606 1052 | nurul.azimah@rrmcapac.com |
| Kristen Lim | +65 8189 9892 | kristen.lim@rrmcapac.com |
| Vera Chen | +65 9816 2480 | vera.chen@rrmcapac.com |
| Lim Shen Yee | +60 12 218 9015 | shen.yee@rrmcapac.com |
| Yvonne Brigitte | +62 819 0635 2975 | yvonne.b@rrmcapac.com |
| Chloe Bui | +84 38 7717442 ^ | chloe@rrmcapac.com |
| Chutinun Guna-Tilaka | +66 61 956 2939 | chutinun@imageimpact.co.th |
| Hal Serudin | +65 6838 9675 | hal.serudin@rolls-roycemotorcars.com |
| Helpdesk | +65 9017 6272 * | info@rrmcapac.com |
| | +66 83 076 6196 | |

*WhatsApp / ^Zalo


Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK